திருமங்கலம் வட்டம், சந்தையூர் அருகே அமைக்கப்பட்ட ஏரி.

*வினா எண் 275—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம் சந்தையூர் அருகே 10 இலட்சம் செலவில் ஏரியொன்று புதிதாக அமைக்கப்பட்டதா ?

(ஆ) அந்த ஏரி தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

நிலத்தடி நீரியல் ஆய்வுகள் நடத்தும் திட்டம்.

*வினா எண் 276—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் இலவசமாக நிலத்தடி நீரியல் ஆய்வுகள் நடத்தித்தர அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இலவசமாக இல்லாமல் குறைந்த தொகைக்கு செய்து கொடுக்கலாமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏழை எளியவர்களுக்கு அல்லது ஆதி திராவிட மக்களுக்குக்கூட அவர்களுக்கு நீதி கிடைக்காது அல்லது அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் செல்ல முடியாது என்ற நிலையிலே நாம் இலவசமாக அவர்களுக்கு அந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையிலே குறைந்தபட்சம் இந்த நிலத்தடி நீரியலைப் பார்க்கின்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்றுகூட சில விவசாயிகளுக்குத் தெரியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, ஒரு ஒன்றியத்திற்கு இரண்டு மாதங்கள், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை ஒருவரை அனுப்பி வைத்து அந்தத் தேவையின் அடிப்படையில் இலவசமாகச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.